மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 450, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

450—

புவனகிரி தொகுதியில் ஹட்கோ மூலம் வீடுகள் கட்டுதல்

*26848—**செல்வி கோ. மல்லிகா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, மஞ்சக்கொல்லை, மிராளூர், பி. ஆதனூர், வத்திராயன் தெத்து, பி. மடுவங்கரை, நஞ்சைமகத்துவாழ்க்கை ஆகிய இடங்களில் வெள்ளத்தினால் வீடு சேதம் அடைந்தவர்களுக்கு ஹட்கோ மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடங்களில் உள்ள, வெள்ளத்தினால் வீடு சேதம் அடைந்தவர்கள், இதுவரை கடன் உதவி பெறாமல் இருப்பார்களேயானால் வட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆண்டுதோறும் செயல்படுத்தப்படுகின்ற கிராமிய வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கடன் பெற்று, வீடுகள் கட்டிக் கொள்ள அவர்கள் விரும்பினால் எதிர்வரும் ஆண்டில், செயல்படவுள்ள ஹட்கோ-13 என்ற திட்டத்தில் அவர்களைப் பயனீட்டாளர்களாகச் சேர்த்து, அவர்களுக்கு வீடு கட்ட ஹட்கோ மூலம் கடன் உதவி பெற்றுத் தர ஆவன செய்யப்படும்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இதயத்தில் வாழும் எங்களது இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், கிராமப்புற மக்களும் நல்லமுறையில் நவீன வசதிகளுடன் வீடுகள் கட்டிக்கொள்ள உதவிடும் வகையில், பல்வேறு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்திவரும் இந்த நல்ல நேரத்தில், புவனகிரி ஒன்றியத்தில்

1995 ஏப்ரல் 26]

உள்ள பல்வேறு கிராம மக்கள், வீட்டு வசதி கோரி முறைப்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு உடனடியாக வீட்டு வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் வட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு அலகுகள் குறிப்பிடப்பட்டு, அந்த அளவுக்குக் கடன் வழங்குவதற்காக இன்றைக்கு கடன் உதவி செய்யப்பட்டு வருகிறது. இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நபர்களுக்கு கடந்த ஆண்டுகளிலே கடன் வசதியை அவர்கள் பெற இயலாமல் இருந்திருக்குமானால், இந்த ஆண்டு ஹட்கோ 13-வது திட்டத்தில் அவர்கள் பயனீட்டாளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹட்கோ-13வது திட்டம் என்பது எப்போது முதல் துவக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-1995லேயிருந்து 31-3-1996 வரைக்குண்டான காலக்கெடுதான், ஹட்கோ-13வது திட்டமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 451, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

451—

தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடன் வழங்குதல்

15459—திரு க. அர்ச்சுனன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் விசைத்தறிக்கு மீண்டும் கடன் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், மாவட்டக் கிளை மூலம் கடன் கிடைக்க வழிவகை செய்யப்படுமா?